பக்கங்கள்: 19

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 07 திங்கட்கிழமை 24.10.2022 கதிர் 351

**இனி இது ரகசியம் அல்ல!**

'பனையில் தேள் கொட்ட தென்னையில் நெறி கட்டிய மாதிரி' என்று கூறுவர்.

அப்படி ஒரு சம்பவம் குறித்து இப்போது பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

தமிழகத்தில் இந்து மதத்திற்கு எதிரான தீவிரவாதத்

☞2

# போதை வஸ்தைத் தடுப்பதில் வேலியே பயிரை மேய்கிறது!



## சுமந்திரன் எம்.பி. காட்டம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக்டோபர் 24

போதைப்பொருள் பாவனையை சட்டரீதியாகத் தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிற நிலையில் அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

☞2

## கைவிடுங்கள் போதைவஸ்தை! யாழ். குருமுதல்வர் மன்றாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்டோபர்24


போதைவஸ்து பாவனைக்கும் போதைவஸ்தை கடத்துவதற்கும் செயல்படுபவர்கள் அனைவரும் அந்தத் தீய செயற்பாட்டில் இருந்து விலக வேண்டுமென யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் மன்றாட்டமான கோரிக்கையொன்றை விடுத்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வரும் போதைபொருள் பாவனை தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எங்கள் சமுதாயத்தை ஆள்கொண்டிருக்கும் பெரும் தீமையாகிய

☞2



## சுயாதீன ஆணைக்குழுக்கள் சகலமும் செயலிழக்கின்றன



அரரசமைப்பின் 22ஆவது திருத்தும் நடைமுறைக்கு வருகின்ற நிலையில், தற்போது இயங்கி வரும் அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களின் பதவிக் காலம் முடிவடையும் என நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அரசமைப்பு சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்

☞2

## 43 யாழ்ப்பாணவாசிகள் உனவட்டுனவில் கைது!

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் உட்பட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 43 பேர் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

☞17

## விக்டோரியா நீர்த்தேக்கப் பகுதியை ட்ரோனில் படம் பிடித்த 7 பேர் கைது



விக்டோரியா நீர்த்தேக்கத்தின் உயர் பாதுகாப்புப் பகுதியை ஆளில்லாட்ரோன் கமெரா மூலம் படம்பிடித்துக் கொண்டிருந்த ஏழு பேர் நீர்த்தேக்கத்தின் பாதுகாப்பில் இருந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஏழு பேரும் அனுமதியின்றி ட்ரோன் கமெரா மூலம் நீர்த்தேக்கம் மற்றும் அணையின்

☞17

## காக்கைதீவு, சாவல்கட்டு மீனவர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்



தடையில்லாமல் மண்ணெண்ணெயை வழங்குமாறு கோரி காக்கைதீவு துறைமுகத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் காக்கைதீவு மற்றும் சாவல்கட்டு மீனவர்கள் நேற்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டமொன்றினை முன்னெடுத்துள்ளனர்.


"யுத்தம் நடந்த காலப் பகுதியில் கூட மண்ணெண்ணெய்க்கு இவ்வாறான தட்டுப்பாடு நிலவவில்லை. அந்த காலப்பகுதியிலும் நாங்கள் மிக இலகுவாக மண்ணெண்ணெய் பெற்றுக்கொண்டோம்.

☞17

## நியூயோர்க்கில் இலங்கையர்கள் கைகலப்பு

அமெரிக்காவின் நியூயோர்க்கில் இலங்கையர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

☞17






## வவுனியாவின் தனியார் மருத்துவ நிலையம் அதிகளவில் போதை மாத்திரைகளைப் பெற்றமை குறுத்து சந்தேகம்

வவுனியாவில் உள்ள வைத்தியர் ஒருவரும் தனியார் மருத்துவ நிலையம் ஊடாக மாதாந்தம் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்யப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி போதை மாத்திரை பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் திடீர் சோதனை நடத்தியுள்ளனர். இதன் போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல மருந்து மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து வவுனியாவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் தனது தனியார் மருத்துவ நிலையத்தின் பெயரில் மாதாந்தம் 400 பெட்டி உயிர் கொல்லி போதை மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளார். அவர் வவுனியாவிலுள்ள அரச மருத்துவமனை ஒன்றிலும் பணியாற்றுகிறார்.

☞17

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாக்குதல்களுக்கு புகழ்பெற்ற மையம் கோயம்புத்தூர்என்பதுநாம்வாசித்தறிந்த விடயம்.

அங்கு நேற்று விடி காலை 4 மணிக்கு ஓர் இந்து கோவில் அருகே கார் ஒன்று திடீரென வெடித்துப் பற்றியெரிந்து இருக்கின்றது. காரில் இருந்தவர் எரிந்து மாண்டார். வெடிப்பில் கார் இரண்டாகப் பிளந்துள்ளது.

இந்தியாவின் அனைத்துப் புலனாய்வு அமைப்புகளின் கவனமும் இச்சம்பவத்தின் மீது குவிக்கப்பட்டிருக்கின்றது. வெடித்த காரில் இருந்த சில பொருள்கள் நாச வேலைகளுக்குப் பயன்படுத்தக் கூடியவை என்பதை புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

காரில் இருந்த ஒன்றுக்கும் மேற்பட்ட காஸ் சிலிண்டர்களே வெடிப்புக்கு காரணம் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

அதிகாலை நான்கு மணிக்கு அப்பகுதியில் சன நடமாட்டம் இல்லாத சமயத்தில் இந்த அனர்த்தம் நிகழ்ந்ததால் கார் சாரதியின் உயிர்ப் பலியுடன் இழப்பு விடயம் அடங்கிவிட்டது.

ஆயினும் மத 'சென்சிட்டிவ்னெஸ்' மிக்க கோவையில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் சாதாரண ஒன்றல்ல, இதற்குப் பின்னால் பூதாகரமான விடயங்கள் இருக்கின்றன எனப் புலனாய்வாளர்கள் கருதுகின்றனர் என்று தெரிகிறது. அதற்கான ஆரம்பக் 'குளு'க்களும் அவர்களுக்கு கிட்டியிருப்பதாகத் தகவல்.

வெடித்த வாகனத்தின் உரிமையாளரைக் கண்டு பிடிக்கவே பொலிஸார் தலையைப் பிய்க்கின்றனர். ஏனெனில் நான்கு வருட இடைவெளியில் அந்தக் கார் ஆறு உரிமையாளர்களின் கைகள் மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றதாம்.

இவை அனைத்திற்கும் அப்பால், உயிரிழந்தவர் யார் எனப் பொலிஸார் ஏறக்குறைய அடையாளம் கண்டு விட்டனர் என்றே தெரிகின்றது. அதில்தான் எமக்கான சிக்கலும் உள்ளது. 'சுத்திச் சுத்தி சுப்பரின்ற கொல்லைக்குள்...!' என்பது போலவே அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த விவகாரத்தில் நிச்சயம் புலித் தொடர்பு இல்லை, ஆனால் இலங்கைத் தொடர்பு இருப்பதாக சில வட்டாரங்களில் பேசப்படுகின்றது

இலங்கையில் ஈஸ்டர் ஞாயிறுக் குண்டு தாக்குதலுக்கு முன்னரே அது குறித்து நுணுக்கமான விடயங்கள், தகவல்கள் அனைத்தையும் கண்டறிந்து, நேரத்துடன் கொழும்பை எச்சரித்திருந்தது இந்தியப் புலனாய்வுத் தரப்பு.

தாக்குதல் நடக்கக்கூடிய நாள், நேரம், உத்தேச இடங்கள் குறித்துக் கூட மிக நுட்பமான தகவல்களை இந்தியா வழங்கி இருந்தது என்பது நாம் எல்லோரும் அறிந்த விடயம்தான்.

இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பில் இந்தியத் தரப்பின் மதிநுட்பம் அலாதியானது; அட்சரம் பிசகாதது.

இந்தப் பின்புலத்தில், இப்போது நடைபெற்ற குண்டுவெடிப்பை நான் ஆரம்பத்தில் கூறிய 'பனையில் தேள் கொட்ட தென்னையில் நெறி கட்டும்' கதையோடு ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளுங்கள்!

அங்கு கோவையில் வெடித்த காருக்கு இங்கு இலங்கையில் நெறி கட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்கின்றனர் விடயம் அறிந்த வட்டாரங்கள்.

சாரதியாக இருந்து உயிரிழந்தவர் சரியாக அடையாளம் காணப்படும் போது, இலங்கையிலும் நெறி கட்டித் தொடர் நடவடிக்கைகள் இடம் பெற்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதற்கிடையில் -

கொழும்புக்கான சீனத் தூதர் நேற்று மட்டக்களப்புக்குச் சென்றிருக்கிறார் என ஒரு தகவல் தெரிவிக்கிறது. சிவில் சமூக அழைப்பில் சென்றாராம். நேற்று இரவு மட்டக்களப்பில் தங்குகின்ற அவர், இன்று திருகோணமலைக்குச் செல்ல கூடும் என்று ஒரு தகவல் உள்ளது. நாளை அவர் யாழ்ப்பாணம் வந்தாலும் வரலாம்.

எது, எப்படி என்றாலும், தமிழர்களின் தாயகபூமி மீதும், அவர்கள் செறிந்து வாழும் பிரதேசமான வடக்குக் கிழக்கின் மீதும் சீன தூதர் தரப்பினருக்கு இப்போது புதிதாக ஏற்பட்டுள்ள காதல் - பற்று - ஈடுபாடு - தமிழர் தாயகத்துக்குத் தேவையில்லாத நெருக்கடியை வாங்கித் தரப் போகின்றன என்பது என் அனுமானம்.

தமிழர்கள் தாங்களாகவே முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வது நல்லது. வானத்தில் போன பாம்பை ஏணி வைத்து இறக்கி, மடியில் கட்டிக்கொண்டு பின்னர், அவஸ்தை படுவது போல முட்டாள்தனமாக தமிழர்கள் நடக்காமல் இருப்பது தமிழின எதிர்காலத்துக்கு நல்லது. சம்பந்தப் பட்டோருக்கு புரிந்தால் சரி.

- மின்னல் -

## சுயாதீன ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனத் தாம் நம்புகிறார் என விஜேயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து 2 வார காலத்திற்குள் ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய தேர்தல் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, தேசிய கணக்காய்வு ஆணைக்குழு, பொது சேவை ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்கள் இதில் அடங்கும்.

## கைவிடுங்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போதைவஸ்துப் பாவனைக்கு எதிராக அனைவரும் பாடுபட வேண்டும் .அதற்கு எதிராக பாடுபடுபவர்களுக்காக நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

இன்னமும் போதைவஸ்து பாவனைக்கும் போதைவஸ்தை கடத்துவதற்கும் பலரும் ஆதரவாக செயல்பட்டு வருகின்றனர். அவ்வாறானவர்களிடம் நாங்கள் மன்றாட்டமாகக் கோருவது என்னவெனில் இந்த தீய செயற்பாட்டில் இருந்து அனைவரும் விலக வேண்டும் என்பதே.

இவ்வாறான தீய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பாதுகாப்பு தரப்பினரும் சிவில் உத்தியோகத்தர்களும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு போதைப் பொருளால் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகளை பெற்றோர்கள் இனம் கண்டு உடனடியாக புனர்வாழ்வு இடங்களுக்கு அனுப்பி சிகிச்சைக்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் - என்றார்.

## போதை வஸ்தைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகரித்து வரும் போதைபொருள் பாவனை தொடர்பில் கருத்துரைக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

போதைப் பொருள் பாவனை தற்போது தலைவிரித்தாடுகின்றது. இதன் காரணமாக பத்து இளைஞர்களுக்கு மேல் உயிரிழந்துள்ளார்கள். 140 பேர் வரையிலானோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த காலத்தில் 'வன்முறை ஒழிப்போம்; போதை பொருளை தடுப்போம்!' எனும் தொனிப்பொருளில் நாம் ஒரு வேலை திட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.

கொரோனாப் பெருந்தொற்று காரணமாக அதனை தொடர்ச்சியாகச் செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனாலும் தற்போது போதைப்பொருள் பாவனை என்பது தலைக்கு மேலே சென்று விட்டது. இதன் காரணமாக மீண்டும் அந்த வேலை திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளமையுடன் மூன்று விதமாக அதனை மேற்கொள்ளவுள்ளோம்.

முதலாவது - இளையவர்களுக்கு புத்திமதி வழங்கும் ஒரு விழிப்புணர்வு தொடர் நிகழ்வைப் பாடசாலை மட்டத்தில் நடாத்தல்.

இரண்டாவது - போதைப்பொருள் பாவனையில் சிக்கி உள்ளவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது தொடர்பான விடயங்களை மேற்கொள்ளல்.

மூன்றாவது - போதைப்பொருள் பாவனையை தடுக்கவேண்டும். இதனை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிறது. அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- என்றார்.






Search Facebook
V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

0768226244
0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயிரை மேயும் வேலிகள்

இன்று தீபாவளி. தீபத் திருநாள்.

தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள். தீபங்கள் ஜோதியாய்ப் பிரகாசிக்கும் போது இருள் அகலுகின்றது. ஒளி நம்மை ஆள்கொள்கின்றது. இருள் எனும் துன்பம் நீங்கி, பிரகாசம் எனும் இன்பம் கவிவதாக இதற்கு ஓர் அர்த்தம் உண்டு.

கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தார் என்று தொடங்கி, தீபாவளியை ஒட்டிய பல சிந்தனைக் கருத்துக்கள் பாரம்பரியமாக – வரலாற்றுத் தொடர் மனப்பதிவாக – நம் மத்தியில் நிலைத்துள்ளன. தீமை அழிக்கப்பட்டு, நன்மை நிலைநிறுத்தப்பட்டமையை உவமிக்கும் புராணங்களாகவே அந்த நம்பிக்கைக் கதைகள் எல்லாம் கட்டவிழ்கின்றன.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு பண்டிகையின் போதும் – அது தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி, கிறிஸ்மஸ் எது என்றாலும் அதனை ஒட்டி – தங்கள் வாழ்வை அதுவரை சூழ்ந்திருக்கும் அடக்குமுறை இருள் நீங்கி, சுதந்திரத் தீர்வு என்ற ஒளி வெள்ளம் பரவ – பாய – வாய்ப்புக் கிட்டாதா என்று ஏங்குவது அவர்களின் வழமை.

அவர்களைப் பொறுத்தவரை போரழிவிலும், பேரழிவிலும் சிதறிச் சின்னாபின்னமாகிக் கிடக்கும் தமது இனத்துக்கு நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய, நீதி, நியாயமான ஒரு தீர்வு என்னும் வெளிச்சம் கிட்டாதா என்று கடந்த ஆறு தசாப்தங்களாக அவர்கள் ஒவ்வொரு பண்டிகையின் போதும் ஏங்கிக் காத்திருந்து, பார்த்து, கடந்து, ஏமாறுவது வழமை.

அவர்களைச் சூழ்ந்திருக்கும் அடக்குமுறைக் காரிருள் நீங்கும் அறிகுறி இன்னும் தென்படவே இல்லை. அது நீங்குவதற்கான வாய்ப்புத் தோன்றவே இல்லை.

மாறாக, அவர்களையும், அவர்களது தாயகத்தையும் பற்றிப் பீடித்து, ஆக்கிரமித்து, கபளீகரம் செய்து வரும் பேரினவாத அசுரனின் பிடிதான் மேலும் மேலும் இறுகி வருகின்றது. அந்த அடக்குமுறை இருள் நீங்கி, நீதி தேவனின் நியாய ஒளிவீச்சு அவர்களுக்குக் கிட்டுவதாகவே இல்லை.

'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல' அடக்கு முறையில் தமது இருப்பையே தொலைக்கும் அவலத்தில் சிக்குண்டுள்ள தமிழினத்தை, போதைப் பொருள் என்னும் மற்றொரு நரகாசுரன் பற்றிப் பீடித்துப் பேரழிவைத் தந்து நிற்கின்றான்.

அந்த அசுரனிடமிருந்து சமூகத்தைக் காக்க வேண்டிய தரப்புகளே 'வேலியே பயிரை மேய்வது போல' அசுரர் பக்கம் அணிகட்டியிருப்பதாக மேலும் வேதனையான செய்திகள் வெளி வருகின்றன.

போதைப் பொருள் பாவனையை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டியவை முத்தரப்புகள். பாதுகாப்பு தரப்பு, மருத்துவ – சுகாதாரத் தரப்பு, சமூகம் ஆகியவை அவை.

இந்த முத்தரப்புகளிலுமே பயிரை மேயும் வேலிகள் இருக்கின்றன என்பதுதான் அதிர்ச்சி தரும் தகவலாகும்.

இந்தப் போதைப் பொருள் பேரரக்கன் நரகாசுரனை அழிக்க சமூகம் என்ற கிருஷ்ண பரமாத்மா கொதித்தெழுவது இன்றைய காலத்தில் கட்டாயமாகும்.

## இலங்கை அகதிகளை மூன்றாவது நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு பிரித்தானியா தீர்மானம்!

சாகோஸ் தீவுகளில் இருந்து புகலிடம் கோரி வரும் இலங்கை அகதிகள், அவர்கள் தானாக முன்வந்து இலங்கைக்குத் திரும்பா விட்டால், அவர்களைப் பாதுகாப்பான மூன்றாவது நாட்டுக்கு அனுப்ப பிரித்தானியா தீர்மானித்துள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடியாத பட்சத்தில், வேறு ஓர் அறியப்படாத நாட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என ஏசியன் நியூஸ் இன்டர்நேனல் தெரிவித்துள்ளது.

மொரிஷியஸ் மற்றும் பிரித்தானியாவில் உரிமை கோரப்படும் சாகோஸ் தீவுக்கூட்டத்தில் உள்ள ஒரு தீவான டியாகோ கார்சியாவில் உள்ள முகாமில் குறைந்தது 120 இலங்கையர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர் என நம்பப்படுகிறது.

இதுவரை 60 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தாமாக முன்வந்து நாடு திரும்பியுள்ளனர் எனப் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜெஸ்ஸி நோர்மன் அண்மையில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சட்டவிரோதமாக இலங்கைக் குடியேற்றவாசிகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஆஸ்திரேலியா மீண்டும் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து வெளிநாட்டு விசாரணை அவசியமல்ல பொலிஸாருக்கு சுதந்திரம் வழங்குக!

### கர்தினால் மல்கம் கோரிக்கை



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு விசாரணைகள் அவசியமில்லை என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலாகப் பொலிஸாருக்கு சுதந்திரமாக செயற்பட அனுமதி வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கந்தவல தேவாலயத்தில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வுகளின் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸாரிடம் ஒப்படைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளுக்குப் போதியளவு சுதந்திரம் வழங்கினால் தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்ற உண்மையை அறிந்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச உதவியை நாடவுள்ளதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் நடந்த மோசடி அம்பலமானது!

2020 ஆம் ஆண்டு மருந்து ஆராய்ச்சிக்காக இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் 213 கிலோ மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளது.

அதில் 175 கிலோ மருந்துப் பொருள்கள் தரமற்றனவாகவும் பாவனைக்குத் தகுதியற்றனவாகவும் காணப்பட்டன என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இருபது லட்சம் ரூபாவிற்கு மேல் செலவிட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் பல்வேறு காரணங்களால் அந்த வருடத்தில் மருந்து உற்பத்தி இடைநிறுத்தப்பட்டமையால் கிட்டத்தட்ட இருபத்தி ஆறு லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஒவ்வொரு உற்பத்தியின் போதும் மோசமான தோற்றம் மற்றும் மாத்திரை உடைவு என்பனவற்றால் ஏற்படும் இந்த மோசமான நிலையை குறைக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், 2020 ஆம் ஆண்டில் மருத்துவ வழங்கல் பிரிவால் ஓடர் செய்யப்பட்ட சுமார் நூறு கோடி ரூபா மதிப்பிலான 26 வகையான மருந்துகளில் 570.78 மில்லியன் யூனிட்களை வழங்க மாநகராட்சி தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

## பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய சர்வதேசப் பொறிமுறை அவசியம்

### சிவில் சமூகம் வலியுறுத்து



பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும் தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கை முடிவிற்குக் கொண்டுவரவும் சர்வதேச பொறிமுறை அவசியம் என சிவில் சமூகப்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூவிடம் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் இராணுவமயமாக்கலை முடிவிற்குக் கொண்டுவர அமெரிக்க அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற உள்ளகப் பொறிமுறைகளால் எவ்வித பலனும் கிட்டவில்லை என்றும் டொனால்ட் லூவிடம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் பிரயோகம், உத்தேச புனர்வாழ்வுப் பணியகச் சட்டமூலம் என்பன தொடர்பாகவும் மாகாணசபைத் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றை இயலுமானவரை விரைவாக நடத்தவேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

# தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தாமல் பிற்போடும் முயற்சியில் அரசாங்கம் தீவிரம்!

## ஹக்கீம் குற்றச்சாட்டு



புனர்வாழ்வு செயலகம் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழுங்கிய தீர்ப்பின் மூலம், உயர் நீதிமன்றம் அரசாங்கத்தின் மீது பாரிய குற்றப்பகிர்வை வழுங்கி இருக்கின்றது.

அத்துடன் அரசாங்கம் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தாமல் பிற்போடுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருவதாகவே தெரிகின்றது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாங்கள் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் 21 ஆம் திருத்தத்தை முன்வைத்திருந்தோம். என்றாலும் ஜனாதிபதியின் தத்துவங்களைக் குறைப்பது தொடர்பில் மக்கள் தீர்ப்பு பெறவேண்டும் என்ற உயர் நீதிமன்றம் வழுங்கிய தீர்ப்பால் அது தடைப்பட்டது. இந்நிலையில் அரசாங்கம் பல சவால்களுக்கு மத்தியில் 22 ஆம் திருத்தத்தைக் கொண்வந்திருக்கின்றது.

இதிலும் ஜனாதிபதியின் தத்துவங்களைக் குறைப்பதற்கு மக்கள் தீர்ப்பு பெற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததால், சில திருத்தங்களுடன் 22 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதனால் இந்தத் திருத்தத்துக்கு நாங்கள் ஆதரவளித்தோம்.

அரசமைப்பின் 17 மற்றும் 19 ஆம் திருத்தங்களின் போது ஜனாதிபதியின் தத்துவங்களைக் குறிப்பிடத்தக்கவகையில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். ஆனால் 22 ஆம் திருத்தத்தில் அந்த தத்துவங்களைக் குறைப்பதற்கு மக்கள் தீர்ப்பு வேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கின்றது. அதன் மூலம் நாங்கள் எதிர்பார்த்த திருத்தங்கள் இதில் வரவில்லை.

மேலும் புனர்வாழ்வு சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழுங்கிய தீர்ப்பின் மூலம், அரசாங்கத்தின் மீது குற்றப்பகிர்வைத் தெரிவித்திருக்கின்றது.

இந்த சட்டமூலம் முழுவதும் அரசமைப்பு முரணாக இருப்பதால் விசேட பெரும்பான்மை மூலமே நிறைவேற்றப்படலாம் என உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கின்றது.

குறிப்பாக முன்னாள் போராளிகள், போராட்டக்கார்கள் என்ற வார்த்தைகள் சட்டமூலத்தில் இருந்து நீக்கப்படவேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கின்றது. இது அரசாங்கத்தின் மீதான பாரியதொரு குற்றப்பகிர்வாகும்.

அதேபோன்று உயர்பாதுப்பு வலயம் தொடர்பாக ஜனாதிபதி வர்த்தமானி அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார். இறுதியில் அதனை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான முகாம்கள் தொடர்பாகவும் இவ்வாறானதொரு தீர்ப்பு வழுங்கப்பட்டிருக்கின்றது. இதில் அடிப்படை உரிமைகள் முழுமையாக மீறப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று தற்போது மீண்டும் மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. உள்ளூராட்சி தேர்தலை எல்லை நிர்ணய குழு மற்றும் பல்வேறு விடயங்களை தெரிவித்து பிற்போட முயற்சிக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் மக்களின் வாக்குரிமையை இல்லாமலாக்கும் செயலாகும்.

மாகாணசபைத் தேர்தல் சட்டமூலத்துக்கு நாங்கள் ஆதரவாக செயற்பட்டோம். இறுதியில் அது தோல்வியில் முடிவடைந்தது. அதனால் மாகாணசபைகள் தற்போது முகுமையாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் எந்தவொரு மாகாணசபைகளும் சட்டரீதியில் அமைக்கப்படாமல் இருப்பதால், அந்த சபைகள் தங்கள் நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றன.

அதனால் இது நாடாளுமன்ற சட்டவாக்கத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் நாங்கள் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

எனவே அரசாங்கத்தின் இந்த முயற்சிகள் அனைத்தும் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தாமல் ஒத்திவைப்பதற்கான முயற்சிகளாகவே தெரிகின்றது. அதனால் அரசாங்கம் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தி மக்களின் வாக்குரிமைகளை பயன்படுத்த இடமளிக்கவேண்டும். – என்றார்.



# எமது நாட்டின் அரசமைப்புகள் கேலிக்குரியவையாகி உள்ளனவாம்!

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வேதனை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி, புனர்வாழ்வுப் பணியகத்தை உருவாக்குவது ஜனநாயகம் அல்ல. அது மக்கள் எதிர்பார்ப்பும் அல்ல என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 22 ஆம் திருத்தத்திற்கு ஆதரவளிக்க எமது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்தது. அவ்வாறு நாம் அதனை ஆதரிப்பதால் இந்தத் திருத்தம் மக்கள் அபிலாகைகளை நிறைவேற்றுவதற்காக கொண்டுவரப்படுகிறது என்று நாங்கள் கூறப்போபவர்கள் அல்லர்.

தொடர்ச்சியாக எமது அரசமைப்புகள் கேலிக்குரியவையாகியுள்ளன. அவைகள் வர்ணம் பூசப்பட்டனவாகவே தொடர்ந்தும் திருத்தப்பட்டு வந்துள்ளன.

அந்த வகையில் 18 ஆவது அரசமைப்பு திருத்தம் ஒருவர் இரண்டு முறை ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதற்காக தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காகக் கொண்டுவரப்பட்டது.

அதேபோன்று நாடாளுமன்றத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டையே இருபதிலும் கொண்டிருந்தனர்.

அந்த வகையில் ஒன்றுக்கொன்று அவை முரண்பாடானவை. இதனால் எமது நாடாளுமன்றத்தின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கை தொடர்பில் நாம் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை.

காலத்துக்குக் காலம் அரசியல் கட்சிகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்கின்றன. ஆனால் அவை மக்கள் எதிர்பார்ப்பனவல்ல.



எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி, புனர்வாழ்வு பணியகத்தை உருவாக்குவது ஜனநாயகம் அல்ல.

அது மக்கள் எதிர்பார்ப்பும் அல்ல. அதனால் தூரதரிசனத்துடன் மக்கள் எதிர்பார்க்கும் நாடாளுமன்றத்தை உருவாக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது, அத்துடன் 22 ஆவது அரசமைப்பை நாம் ஆதரிப்பதன் மூலம் அதனை மக்கள் எதிர்பார்ப்பு எனக் கூற முடியாது. – என்றார்.

## கோழி இறைச்சியின் விலை 250 ரூபாயால் குறைப்பு

ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலையை 250 ரூபாவால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1,450 க்கு விற்கப்பட்ட ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் புதிய விலை 1,200 என என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியுடன் வந்த தடைகளையும் மீறி தற்போதுள்ள விவசாயிகளால் கோழி வளர்ப்பு அதிகரித்துள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## தேசிய தோட்டதொழிலாளர்சங்க தலைவராக சாகல ரத்நாயக்க!



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் நிர்வாக சபை கூட்டம் இடம்பெற்றது. இதன் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக உள்ள அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இந்த பதவியிலிருந்து விலகுகிறார் எனவும் வேறு ஒருவரை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு அமையவே சாகல ரத்நாயக்கவை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த வாரத்தில் ஹரின் பெர்னாண்டோ உத்தியோகபூர்வமாக அறிவிப்பு கட்சியின் நிர்வாக சபைக்கு வழங்கிய பின்னர் அந்தப் பதவிக்கு சாகல ரத்நாயக்க நியமிக்கப்படுவார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

தீபாவளி வாழ்த்துக்கள்

# அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞானம் பிறக்கும் நன்னாள் தீபாவளி!

## ஜனாதிபதி ரணில் வாழ்த்து

வண்ண மயமான கலாசார நிகழ்வான தீபாவளி நன்னாளில் வாழ்த்து தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞானம் பிறக்க வேண்டும் என்பதற்காக இந்துக்கள் இந்நன்னாளில் தங்களின் இல்லங்கள், கோயில்கள் என அனைத்து இடங்களிலும் தீபம் ஏற்றி, தீபத்திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஒளியால் மட்டுமே இருளை நீக்க முடியும். அதேபோல நம் தாய் நாட்டை முன்னொருபோதும் இல்லாத விதத்தில் சூழ்ந்திருக்கும் இருளை விரட்டி, ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயற்பட வேண்டும்.



சுபீட்சமான ஒரு நாட்டுக்கு சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம் என்பன மிகவும் முக்கியமானவை. இனம், மதம், கட்சி, நிறம் என்ற பிரிவினையின்றி, நம்வாழ்விலும், நாட்டிலும் சூழ்ந்திருக்கும் இருளை நீக்க வேண்டும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு அனைவரும் கைகோர்த்துக் கொள்ளவேண்டும் என்று இத்தீபத் திருநாளில் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

இம்முறை தீபாவளிப் பண்டிகை அனைவரது அபிலாஷைகளையும் பூர்த்தி செய்து, இலங்கையை சௌபாக்கியம் நிறைந்த நாடாக உருவாக்கும் சிறந்த எதிர்காலத்தின் தொடக்கமாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன். தீபத்திருநாளைக் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துக்கள். – என்றுள்ளது.

# ஒளிமயமான நாட்டுக்காக தீபாவளியில் பிரார்த்திப்போம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து

‘வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும்’ பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.



இந்துக்கள் இத்தினத்தில் எண்ணெய் வைத்து, நீராடி, புத்தாடை அணிந்து, ஆலய தரிசனம் செய்வதுடன், ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தீபங்கள் ஏற்றி வழிபடுவார்கள். அத்துடன் பெரியோர்களை வணங்கி,பரிசுப் பொருள்கள் பரிமாறி, பட்டாசு கொளுத்தி, உறவினர்களுடன் இனிப்பான சிற்றுண்டிகள் உண்டு, உலகெங்கும் உள்ள இந்துக்கள் தீபாவளிப் பண்டிகையைக் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தீமையைத் தோற்கடித்து நன்மை கிடைத்த நன்னாளான இன்றைய தீபாவளி தினத்தில், நாட்டில் தற்போதுள்ள ஆபத்தான சூழ்நிலையைத் தோற்கடித்து நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம்.

தீபாவளிப் பண்டிகையை உலகிற்கு இருளை அகற்றி வெளிச்சம் தரும் பண்டிகையாகவும், அறியாமையை நீக்கி ஞானத்தை அளிக்கும் பண்டிகையாகவும் இந்து மக்கள் கொண்டாடுகின்றனர்.

புராதன இதிகாசங்களில் குறிப்பிடப்பட்ட சமூக நல்லிணக்கம், குடும்ப உறவுகளின் முக்கியத்துவம் மற்றும் புரிந்துணர்வு ஆகியவன்றின் ஒருமித்த நாளாக தீபாவளி தினம் கொண்டாடப்படுகிறது.மேலும் இலங்கை மக்களிடையே நல்லிணக்கத்தையும், பரஸ்பர புரிந்துணர்வையும் உருவாக்க இந்த அற்புதமான நன்னாள் பெரும் பங்களிப்பை வழங்குகிறது.

அனைவரினதும் வெறுப்பும் கோபமும் நீங்கி, மனித நல்லிணக்கம் நிறைந்த இலங்கையில் சுதந்திரமாகவும், நல்லிணக்கத்துடனும், சமாதானத்துடனும் வாழ தீபத்திருநாள் அனைவருக்கும் உறுதுணையாக அமையட்டும். – என்றுள்ளது.






# தீபாவளி வாழ்த்துக்கள்

## மீண்டெழும் நம்பிக்கையுடன் தீபாவளியை கொண்டாடுக!

### அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து



பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள சூழலிலும் மீண்டெழும் நம்பிக்கையுடன் தீபாவளித் திருநாளை கொண்டாடும் அனைவருக்கும் அன்பு கலந்த வாழ்த்துக்கள் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு –

வளர்ந்து வரும் சிறிய நாடாகிய எமது தாய் நாட்டின் பொருளாதார பின்னடைவு, பெரும் முடக்கத்தை ஏற்படுத்திய கொரோனாத் தொற்று மற்றும் உலக நாடுகளுக்கு இடையேயான மோதல்களால் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகள் சூழ்ந்துள்ள தற்போதைய நிலையில் எமது நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கக் காத்திரமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் நாமும் எமது வாழ்விடங்களில் உள்ள நிலங்களை பயிர்ச் செய்கை மற்றும் நீர் வேளாண்மைக்கும், ஏனைய வளங்களைப் பொருளாதார தேடலுக்கான வாய்ப்பாகவும் பயன்படுத்தி சுய பொருளாதாரத்தில் எமது மக்களை தலை நிமிரச் செய்யும் முயற்சிகளை அயராது முன்னெடுத்து வருகின்றேன்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியாலும், சுயநலன் சார்ந்த தரப்புக்களின் தூண்டுதல்களுக்கு விலை போனவர்களினாலும்எனதுஅயராதமுயற்சிகளுக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் தொடர வேண்டும் என்றும் மக்கள் நலப் பணிகள் எவ்வகையிலேனும் தடுத்து நிறுத்தப்பட்டுவிட வேண்டும் என்றும் தீய எண்ணங் கொண்ட அசுரர்களை காலம் கணக்கு தீர்க்கும் என்பதே தீபாவளிப் பண்டிகை எடுத்தியம்பும் வரலாற்றுப் பாடமாகும்.

நரகாசூரன் அழிக்கப்பட்ட தீபத்திருநாளைக் கொண்டாடும் உங்களின் நம்பிக்கையை பாதுகாக்க நாம் அர்ப்பணிப்புடன் பாடுபடுவோம் என்ற மகிழ்ச்சியில் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். – என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## கொடூரமான ஆட்சி செய்த நரகாசுரனை வதம் செய்து அறம் வெல்லும் என்ற உண்மையை உணர்த்திய நாள்!

### தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கலாநிதி ஆறு.திருமுருகன்



இந்து மக்களின் இனிய விழாக்களில் தீபாவளிப் பண்டிகை முதன்மையானது. நீதி நிலைக்கும் என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்காக முன்னோர் எடுத்த பெருவிழாவே தீபாவளி திருநாள் விழாவாகும்.

கொடூரமான ஆட்சி செய்த நரகாசுரனை வதம் செய்து, அறம் வெல்லும் என்ற உண்மையை இறைவன் ஞாபகம் ஊட்டிய நாளே இத்திருநாள். இந்தத் திருநாளில் அனைவரும் திருக்கோவில்களுக்கு சென்று வழிபாடு செய்வதோடு மூத்தோரை வணங்கி நல்லாசி பெற வேண்டும்.

– இவ்வாறு தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை நிலையம் ஆகியவற்றின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பழைய கோபங்களை மறந்து எல்லோரும் இன்புற்று வாழ்வதற்காக இந் நாளை பயன்படுத்த வேண்டும். இருளில் இருந்து விடிவு பெற்ற நாளாகிய தீபத்திருநாளில் அகத்தில் நல்லவற்றை எண்ணி நலமே வாழ அனைவரும் திடசங்கர்ப்பம் கொள்வோம்.

எங்கள் மண்ணில் ஏதோ ஓர் இடையூறு தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. தற்போது போதைவஸ்து என்ற அரக்கனின் ஆட்சி உக்கிரம் அடைந்துள்ளது. தீபாவளி திருநாளில் அக் கொடூர சூழலில் இருந்து எம் சமூகம் காப்பாற்றப்படவேண்டும் என அனைவரும் பிரார்த்திப்போம். ஆடை மாற்ற வழியின்றி அவலப்படும் ஏழைகளுக்கு இரங்குவோம். எல்லோருக்கும் உணவு கிடைக்க இந் நாளில் பிரார்த்திப்போம்.

இலங்கையில் உண்மையான நீதி நிலைத்திட இமைப்பொழுதும் பிரார்த்திப்போம். அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன். – என்றுள்ளது.






தீபாவளி வாழ்த்துக்கள்

# மாநிலத்தில் தீபாவளி வாய்த்திருக்கு எமக்கு!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

மனமகிழ மனநிறைய கொண்டாடி நிற்க
தினமதனை முன்னோர்கள் வகுத்துமே நின்றார்
அறிவுடனும் தெளிவுடனும் அவரளித்த கொடையே
ஆனந்தம் பெருக்குகின்ற திருநாட்க ளாகும்

தீபமது வாழ்வினிலே சிறப்பளித்து நிற்கும்
தீபவொளி எல்லோர்க்கும் மங்கலமே ஆகும்
மாவிருளைப் போக்குதற்கு தீபவொளி தேவை
மனமகிழ  தீபாவளி வருகிறது வாழ்வில்

பக்தியொடு பக்குவமும் பாங்காகக் கொண்டு
பலர்மகிழத் தீபாவளி வருகிறது பாரில்
சுற்றமெலாம் சூழ்ந்திருந்து சுவைபயக்கும் நாளாய்
இப்புவியில் தீபாவளி அமைந்திருக்கு எமக்கு

தீமையெனு மெண்ணம் திசையறியாப் போக
தீபாவளி எமக்கு வாய்த்திருக்கு வாழ்வில்
ஞானமதை உணர்த்தி நற்கருமம்  ஆற்ற
மாநிலத்தில் தீபாவளி வாய்த்திருக்கு எமக்கு

புத்தாடை எமக்குப் புத்துணர்வை ஊட்டும்
மத்தாப்பு பட்டாசு மனமகிழ்வைக் காட்டும்
சொத்தான சுற்றங்கள் சுவைமிக்க உணவு
அத்தனையும் தீபாவளி ஆனந்தப் பரிசே

விலவாசி ஏற்றம் விண்ணைத் தொடுகிறது
வேலையின்றி பலபேர் நாளுமே பெருகுகிறார்
எரிபொருளின் விலையோ எரிச்சலைத் தருகிறது
என்றாலும் தீபாவளி எமையணைக்க வருகிறதே

போர்மேகம் ஒருபக்கம் போட்டியோ மறுபக்கம்
பொறுப்பின்றி செயலாற்றும் நாடுகளோ பலபக்கம்
வறுமை ஒருபக்கம் வாய்த்தர்க்கம் ஒருபக்கம்
வரவிருக்கும் தீபாவளி இவைபோக்க உதவிடட்டும்

தித்திப்பை மனமிருத்த தினமே நினைப்போம்
எத்திக்கும் ஆனந்தம் பெருகிடவே எண்ணுவோம்
சித்தமதில் இறையெண்ணம் என்றுமே இருந்திட்டால்
இப்புவியில் எல்லாமே இன்பமாய் ஆகிவிடும்






# தீபாவளி வாழ்த்துக்கள்



# தீபாவளியின் மகிமை!

தமிழர்களின் வாழ்வியலோடு விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் பின்னிப் பிணைந்தவை.

அந்த வகையில் மற்றொரு பண்டிகையாக தீபாவளி இன்று வருகிறது.

தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று அர்த்தம்.

'தீபம்' என்றால் விளக்கு. 'ஆவளி' என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி இருள் நீக்கி ஒளி தரும் பண்டிகையே தீபாவளி ஆகும்.

**தீபாவளி இன்று**

2022 ஒக்ரோபர் 24 ஆம் திகதி, ஐப்பசி 7 ஆம் தீபாவளி 2022 தமிழ் திகதி நாள் திங்கட்கிழமை தீபாவளி கொண்டாடப்படுகிறது. அமாவாசை அன்று தான் பொதுவாக தீபாவளி வரும்.

ஆனால் ஒரு சில வருடங்கள் அமாவாசைக்கு முதல்



நாளே தீபாவளி வரும். இந்த வருடம் அமாவாசைக்கு முந்தைய நாள் தீபாவளி வருகிறது.

**தீபாவளி நல்ல நேரம்**

காலை - 6.15 முதல் 7.15 வரை

மாலை - 4.45 முதல் 5.45 வரை

**தீபாவளி ஏன் கொண்டாடப்படுகிறது ?**

தீப ஒளித் திருநாள் என்று அழைக்கப்படும் தீபாவளி இந்துக்கள் மட்டுமல்லாது உலகின் பல்வேறு மக்களும் கொண்டாடுகின்றனர். தீபாவளி ஏன் கொண்டாடப்படுகிறது என்ற உண்மையான வரலாறு நம்மில் பலரும் அறியாத ஒன்று.

தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதற்கு மூன்று விதமான வரலாறுகள் உள்ளன. அந்த மூன்று விதமான தீபாவளி வரலாற்றை இந்த பதிவில் பார்ப்போம்.



**முதல் வரலாறு**

இராமாயணத்தில் இராமன் இராவணனை அழித்து விட்டு தனது வனவாசத்தையும் முடித்து விட்டு மனைவி சீதை மற்றும் சகோதரன் லட்சுமணனுடன் அயோத்தி திரும்பினார்.

அந்த நாளை, அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த நாள் தான் தீபாவளி என்று கொண்டாடப்படுகிறது என்று ஒரு சாரார் கூறுகிறார்கள்.

**இரண்டாவது வரலாறு**

கந்த புராணத்தின் படி சக்தியின் 21 நாள் கேதார கௌரி விரதம் முடிவுற்ற நாளை தீபாவளியாக கொண்டாடப்படுகிறது. இந்த விரதம் முடிந்த அன்று தான் சிவன் சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று அர்த்த நாரீஸ்வரர் உருவம் எடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது.

**மூன்றாவது வரலாறு**

பல வரலாறுகளில் நாம் கீழே பார்க்கப்போகிற இந்த மூன்றாவது வரலாறு தான் மக்களால் அதிகம் பேசக்கூடிய தீபாவளி பண்டிகை வரலாறு ஆகும்.

அதிக மக்கள் கூறும் நரகாசுரனை வதம் செய்த வரலாறு. இரண்யாட்சன் என்ற ஓர் அரக்கன் பூமா தேவியை கடத்திக் கொண்டு போய் பாதாளலோகத்தில் மறைத்து வைத்திருந்தான்.

அப்போது மஹாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து, அரக்கர்களிடம் போரிட்டு பூமாதேவியை காப்பாற்றுகிறார். அதனால் ஏற்பட்ட பரிசத்தால் பூமாதேவிக்கு பவுமன் என்ற அரக்க குணம் கொண்ட மனிதன் பிறந்தான்.

நரகாசுரனின் மண்ணுலக ஆட்சியும், பேராசையும்

பவுமன்(நரகாசுரன்) பூலோகத்தை ஆட்சி செய்து கொண்டு இருந்தான். அவனுக்கு பேராசை அதிகரித்து விண்ணுலகத்தை ஆட்சி செய்ய விரும்பினான்.

அதற்காக பவுமன் சாகா வரம் வேண்டி பிரம்ம தேவனை நோக்கி கடும் தவம் செய்தான். பிரம்ம தேவன் அவனுக்கு காட்சி தருகிறார்.

**நரகாசுரனின் சாகாவரம்**

அப்போது பிரம்மதேவன் மனிதனாகப் பிறந்த அனைவரும் ஒரு நாள் இறந்துதான் ஆகவேண்டும் என்று கூறுகிறார். பெற்ற தாய், மகனை கொல்லமாட்டாள் என்ற எண்ணத்தில், என்னை பெற்ற தாயைத் தவிர வேறு யாரும் என்னை கொல்லக் கூடாது என்று வரம் வாங்கிக்கொள்கிறான். அதற்கு பிறகு தான் நரகாசுரன் என்ற பெயர் வந்தது.

**விண்ணுலக வெற்றி**

மனிதனாகப் பிறந்து அசுரனாக மாறிய அந்த நரகாசுரன் விண்ணுலகம் போய் தேவர்கள் எல்லோரையும் வெற்றிகொண்டு அவர்களுடைய பெண் குழந்தைகள் 16 ஆயிரத்து 100 பேரைக் கடத்தி வந்து அவனுடைய அந்தப்புரத்தில் சிறை வைத்தான்.

இந்திரனுடைய தாயார் அதிதி அவர்களின் காது, தோடு மற்றும் வருணனுடைய அரசவை குடையையும் திருடி எடுத்து வருகிறான்.அப்போது மகாவிஷ்ணு கிருஷ்ண அவதாரம் எடுத்திருந்தார், பூமாதேவி சத்ய பாமா என்ற பெயரில் அவதரித்து கிருஷ்ணரை



மணந்து கொள்கிறார். இந்திரன் நரகாசுரனின் செயல்களை கிருஷ்ணரிடம் சொன்னதும், கிருஷ்ணர் சத்தியபாமாவை அழைத்து கொண்டு நரகாசுரனுடன் போர் செய்யக் கிளம்பினார்.கிருஷ்ண பரமாத்மாவுக்கும் நரகாசுரனுக்கும் கடுமையான போர் நடந்தது, கிருஷ்ணர் காயமடைந்தது போல் மயங்கி விழுகிறார். அதை பார்த்து கோபமடைந்த சத்யபாமா நரகாசுரன் தனது மகன் என்று தெரியாமல் அம்பு விட்டு தாக்குகிறார்.

நரகாசுரன் இறக்கும் நிலைமைக்கு சென்றுவிடுகிறான். அந்தவேளையில், பூமாதேவியின் அவதாரம் தான் சத்யபாமா என்று அவனுக்கு தெரிகிறது. தன்னுடைய மகனை தன் கையாலே கொன்றுவிட்டதாக எண்ணி சத்யபாமா கண்ணீர் விடுகிறாள்.நரகாசுரன் தான் செய்த பாவத்திற்கு மன்னிப்பு கேட்டு, அவனுடைய தாய், தந்தையரிடம் ஒரு வரம் கேட்கிறான். தன்னுடைய இறப்பை துக்கமாக எடுத்துக்கொள்ளாமல் எல்லோரும் சந்தோசமாக கொண்டாடவேண்டும் என்று கேட்கிறான். அதனால் தீபாவளி என்ற பண்டிகை உதயமானது.

இதனால்தான் நரகாசுரனின் இறப்பை, இந்துக்கள் பட்டாசு வெடித்தும், தீபம் ஏற்றியும், கோலமிட்டும், தீபாவளி வாழ்த்துக்களுடனும் கொண்டாடுகின்றனர்.

அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**

# தீபாவளி சிறப்புநாளை முன்னிட்டு கபில்வத்தையில் விடே வழிபாடு!







சித்தர்களின் குரல் அமைப்பினர் தீபாவளியை முன்னிட்டு மொனராகலையை அடுத்துள்ள அடர்ந்த கபிலவனத்தில் அமைந்துள்ள கபிலவத்தையில் சிறப்பான விடே பூஜை, தியானம், வழிபாட்டை மேற்கொண்டனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் , கபிலவத்தையில் ஏலவே நிறுவி பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகப்பெருமானின் விக்ரகம் முன்னிலையில், பொங்கல் படைத்து, மந்திர உச்சாடனம் செய்து வழிபட்டார்கள்.

'ஆதி கதிர்காமம் 'என அழைக்கப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற கபிலவத்தை முருகப்பெருமான் உறைந்த பாரிய புளிய விருட்சத்தை மௌனமாக தரிசித்து முப்பது நிமிடங்கள் தியானம் செய்தார்கள்.

28 பேரடங்கிய குழுவினர் சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜியின் முறையான நெறிப்படுத்தலில் ஒவ்வொருவராக உட்பிரவேசித்து புளிய மரத்தடியில் உணர்வு பூர்வமாக பயபக்தியுடன் வழிபட்டனர். அனைவரும் வீழ்ந்து வணங்கினர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உபதலைவர் மனோகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் ,நமசிவாய மகேஸ்வரன் சுவாமிகளின் ஆலோசனையின்படி இத்தரிசனம் நடைபெற்றது.

பிரபல நாதஸ்வர வித்துவான் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பாலகுமாரன் குழுவினரின் அருமையான பஜனைபாடலும் இடம்பெற்றது. காரைதீவைச் சேர்ந்த ஆன்மீக ஆர்வலர்களான தவி சாளரும் தர்மகத்தாவுமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கல்வியியலாளர் வி.ரி.சகாதேவராஜா, திருகோணமலை பிரகாஷ் ஆசிரியர், கனடா அன்பர் குமார் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

வழிபாடுகளின் பின்னர் புறமுதுகு காட்டாமல் மௌனமாக திரும்பி பார்க்காமல் அவ்விடத்தை விட்டு பக்திப் பரவசத்துடன் வெளியேறினர். பங்கேற்ற பக்தர்களுக்கு இது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.

# மீண்டும் அதிகரிக்கும் மின்சாரக் கட்டணம்?

மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய சபை கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை மின்சார சபை 1200 கோடி ரூபா வரை நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்கு மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளதோடு கடந்த ஓகஸ்ட் மாதம் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

# நவம்பர் முதலாம் திகதி முதல் தனிநபர் வருமான வரி அறவீடு!

கொழும்பு, ஒக். 24

நாடாளுமன்றத்தின் நிதிக் குழுவின் ஒப்புதல் மற்றும் சபாநாயகரின் கையொப்பத்துக்குப் பிறகு புதிதாக வெளியிடப்பட்ட தனிநபர் வருமான வரி நவம்பர் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருவன்வெல்லவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு தெரிவித்துள்ளார் .

முன்னதாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

# நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக எந்த திருத்தங்களும் அமையவில்லை!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. சுட்டிக்காட்டு



நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு இதுவரை கொண்டுவரப்பட்டுள்ள 20 திருத்தங்களும் தீர்வாக அமையவில்லை என கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

22 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இனப்பிரச்சினைத் தீர்வின் தொடக்கப் புள்ளியாக வைத்து முன்நோக்கி செல்ல வேண்டும் என்றும் கோவிந்தன் கருணாகரம் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இதுவரை கொண்டுவரப்பட்ட திருத்தங்களால் நாட்டில் இனங்களிடையே, மதங்களிடையே மொழிகளிடையே நல்லிணக்கம் ஏற்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலையில் அல்லை, கந்தளாய், சீனித் தொழிற்சாலை குடியேற்றங்கள் ஏற்படும் வரையும் 3 வீதத்துக்கும் குறைவான சிங்களவர்களே அங்கு வாழ்ந்தார்கள் என்பதை சரத் வீரசேகர நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# மறைந்த அட்டமஸ்தானாதிபதியின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி!



மறைந்த அநுராதபுர அட்டமஸ்தானாதிபதி வடமத்திய மாகாண பிரதான சங்கநாயக்க தேரர் கலாநிதி வண.பல்லேகம சிறினிவாசவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மறைந்த அட்டமஸ்தானாதிபதியின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, அங்கே வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டிலும் தனது கருத்துக்களைப் பதிவு செய்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில், முன்னாள் அமைச்சர் எஸ்.எம் சந்திரசேன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பொதுச் செயலாளர் பாளித்த ரங்கே பண்டார உள்ளிட்ட பலரும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டதுடன் மறைந்த அட்டமஸ்தானாதிபதியின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# நாட்டில் கொவிட் வைரஸின் பரவல் முற்றாக நீங்கவில்லை!

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் தகவல்



நாட்டில் கொரோனா வைரஸின் பரவல் முற்றாக நீங்கவில்லை என்று பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரிக்கும் தொற்றாளர்கள் பற்றி தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை மக்கள் முறையான சுகாதாரப் பழக்கவழக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகவும் கொரோனா வைரஸ் முற்றாக நீங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# யாழ். போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை!

## இறப்புக்கு பின்னர் சிறுநீரகங்களை தானம் செய்யும் நன்கொடையாளர்களைச் சமூகம் எதிர்பார்க்கிறது!



இலங்கையில் சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சை முதன் முதலில் 1985 ஆம் ஆண்டு பேராசிரியர் ஷெரீவ்தீன், பேராசிரியர் ரிஸ்வி ஷெரீவ் முதலான விசேட மருத்துவ நிபுணர்களடங்கிய குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை, மாளிகாவத்தையிலுள்ள தேசிய இரத்தச் சுத்திகரிப்பு சிறுநீரக மாற்று நிறுவனம் (The National Institute of Nephrology Dialysis Transplantation), கராப்பிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய போதனா வைத்தியசாலைகளில் சிறுநீரக மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வகையில் யாழ். போதனா வைத்தியசாலையில் முதற் தடவையாக 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி சிறுநீரகம் செயலிழந்த இருவருக்கு, சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது வரை 7 பேருக்கு வெற்றிகரமாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலை குருதிக் குழாய் சத்திரசிகிச்சைத் துறையில் விசேட பயிற்சி பெற்ற சத்திர சிகிச்சை நிபுணர் சிவலிங்கம் மதிவாணன் (Consultant Surgeon, Special Interest in Vascular Surgery), கண்டி தேசிய மவைத்தியசாலையில் கடமையாற்றும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணர் பிரசாத் சுப்பிரமணியம் (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணருமான சச்சிதானந்தன் வினோஜன்(Consultant Vascular & Transplant Surgeon), கண்டி தேசிய வைத்தியசாலையின் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணர் (ச்)சரித்த பெர்னாண்டோ (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணரும் மருத்துவப்பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் பிரம்மா தங்கராஜா (Consultant Nephrologist) மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணர் வேதநாதன் பவந்தன்(Consultant Nephrologist), முதலான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவினர் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.




மருத்துவர் பிரசாத்


மேற்குறிப்பிட்ட விசேட மருத்துவ நிபுணர்களுடன் யாழ். போதனா வைத்தியசாலை இரத்தமாற்று விசேட மருத்துவ நிபுணர்கள் (Consultant Transfusionists), உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் (Consultant Anesthesiologists), மருத்துவர்கள், தாதியர்கள், வைத்தியசாலை நிர்வாகத்தினர் முதலான அணியினர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள வழங்கிய பங்களிப்பு என்பது ஈடிணையற்றது.

சிறுநீரகமாற்று சத்திரசிகிச்சை, தேசிய வைத்தியசாலையுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும். இலங்கையின் 2 ஆவது தேசிய வைத்தியசாலையாக விளங்கும் கண்டி தேசிய வைத்தியசாலையுடன் இணைந்தே நாம் யாழ்ப்பாணத்தில் சிறுநீரக மாற்று சிகிச்சையை மேற்கொள்கின்றோம்.

எமது சமூகத்தில் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக இளம் சமூகத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக 5 வயது சிறுவர்கள் முதல் 75 வயது முதியவர்கள் வரை ஹீமோடயலிஸிஸ் எனப்படும் இரத்தச்சுத்திகரிப்புச் செய்வதற்காக வைத்தியசாலைக்கு வருகிறார்கள். யாழ். போதனா வைத்தியசாலையில் 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மாத்திரம் 145 நபர்களுக்கு 962 தடவைகள் இரத்தச்சுத்திகரிப்பு (Haemodialysis) செய்யப்பட்டுள்ளது. இவர்களில் சில சிறுவர்களுக்கு வாரத்தில் 3 அல்லது 4 தடவைகள் குருதிச் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. மேலும் பலர் ஒவ்வொரு வாரமும் இரத்தச்சுத்திகரிப்புச்செய்து வருகின்றனர். இவ்வாறனவர்களது வாழ்வு வைத்தியசாலையுடனேயே இணைந்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)


மருத்துவர் வினோஜன்


மருத்துவர் ச்சரித பெர்னான்டோ


மருத்துவர் பவந்தன்


மருத்துவர் பிரம்மா


மருத்துவர் மதிவாணன்

# யாழ். போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமாக...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் இரத்தச்சுத்திகரிப்பு அலகு (Dialysis Unit) 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அலகு சிறிய ஓர் இடத்தில் மிகக்குறைந்த ஆளணியினருடன் சிறந்த முறையிலே 24 மணிநேரமும் இயங்கிவரும் ஒரு விசேட மருத்துவ அலகாகும். சர்வதேச மருத்துவக் குழுவின் (IMHO-USA) நிதியுதவியுடன் இதனைத் தற்காலிகமாக விரிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அரச உதவியுடன் 6 தளங்களைக் கொண்ட நிரந்தரக் கட்டடத் தொகுதி அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் முதலான மாவட்டங்களில் இருந்தும் 'டயலிசஸஸ்' செய்வதற்காக பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு பலர் வருகிறார்கள். ஒருவர் 'டயலிஸிஸ்' செய்வதற்காக வரும் போது அவருக்கு உதவியாக இன்னொருவர் வருகின்றார். இதனால் குடும்பம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. ஒருவர் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக 'டயலிஸிஸ்' செய்யும் மருத்துவப் பொறிமுறைக்கு வருகின்றபோது அவரைச் சார்ந்த குடும்பத்தின் சுதந்திரம் அல்லது சமூகச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. 'டயலிசிஸ்' செய்யும் பெரும்பாலானவர்களது வாழ்க்கை இவ்வாறு பல சவால்களை எதிர்நோக்கியிருக்கும்.

'டயலிஸிஸ்' செய்யும் நிலைக்கு வந்த பெரும்பாலானோர் சிறுநீரக தானத்தை எதிர்பார்த்திருப்பர். சிறுநீரகம் செயலிழந்த ஒருவர் அவரது உடற்தகுதி, அவருக்கு உள்ள ஏனைய பாதிப்புக்கள், வயது என்பவற்றைக் கருத்திற்கொண்டு சிறுநீரகவியல் விசேட மருத்துவ நிபுணர்களால் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்குச் சிபார்சு செய்யப்படுவர். யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றார்கள். ஆனாலும் மூளைச்சாவடைந்த ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தைத் தானமாகப் பெறுவதென்பது இலகுவானதல்ல.

இறப்புக்குப் பின்னர் சிறுநீரக தானம் செய்யும் நன்கொடையாளர்கள் கௌரவத்துக்கு உரியவர்கள்

சிறுநீரகத்தை தானமாகப் பெற்ற ஒருவருக்கு புதிய ஒரு வாழ்வு கிடைக்கிறது. ஒருவருக்கு சிறுநீரகத்தை வழங்குவது என்பது பெறுபவருக்கு மட்டுமன்றி அவரைச் சார்ந்த சமூகத்துக்கும் புதியதொரு வாழ்வை, எதிர்காலத்தைக் கொடுக்கிறது; சுதந்திரத்தை வழங்குகிறது நம்பிக்கையைக் கொடுக்கிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவர் சுவாசிப்பதில் இடர்பாடுகளை எதிர்நோக்கும் போது அவருக்குச் செயற்கைச் சுவாசம் வழங்கி உயிர்வாழ்வதற்கான உதவி வழங்கப்படுகிறது. இந்நிலையில் ஒருவரது மூளையின் செயற்பாடு அற்றுப்போகின்றபோது அதனை மூளைச்சாவு என்பார்கள். இவ்வாறு மூளைச் சாவடைந்த ஒருவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறும் நடைமுறையே தற்சமயம் வடபகுதியில் காணப்படுகிறது. ஒருவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டு 12 மணிநேரத்துக்குள் சத்திரசிகிச்சை செய்து சிறுநீரகத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவ உபகரணங்களது உதவியின் மூலம் சுவாசிக்கும் ஒருவருடைய (Intubated patient) மூளையின் இறப்பை, பல்வேறு வழிகளால் மருத்துவர்கள் உறுதிப்படுத்துவர். மூளைச் சாவு என்பது 100 சதவீதம் மரணமடைந்த நிலையேயாகும். ஆனாலும் மூளைச் சாவடைந்த பின்னரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கைச் சுவாசம், மற்றும் மருந்துகள் வழங்குவதன் மூலம் ஒருவரது இருதயம் செயற்பட்டபடி இருக்கும். மூளைச்சாவடைந்தவருக்கு மருந்துகள் வழங்குவது படிப்படியாகக் குறைக்கப்படும். மூளைச் சாவடைந்தவர் உயிர் பிழைப்பார் என்ற தவறான நம்பிக்கை பொதுமக்களிடையே காணப்படுகிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மூளைச் சாவடைந்த ஒருவரது குடும்ப உறுப்பினர்களை அல்லது அந்தக் குடும்பத்தில் பொறுப்பு வாய்ந்த ஒரு நபரை அணுகி இறந்தவரது சிறுநீரகங்களைத் தானமாக வழங்குமாறு கேட்பது மருத்துவ நிபுணர்களுக்கு மிகவும் இக்கட்டான ஒரு நிலையாகும். இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் துறைசார் மருத்துவ வல்லுநர்கள் நீண்ட உரையாடல் மேற்கொண்டு இறந்தவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறல் வேண்டும்.

மூளைச் சாவடைந்தவர்களது சிறுநீரகங்களைத் தானமாக வழங்கி இருவருக்கு வாழ்வு கொடுக்க முன்வருவோர் கௌரவத்துக்குரியவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

இலங்கையில் சிறுநீரகத்தை விற்பதோ அல்லது மறைமுகமாக சிறுநீரக விற்பனையைத் தூண்டுவதோ சட்ட விரோதமானதாகும். மூளைச் சாவடைந்தவர்களது சிறுநீரகத்தைத் தானமாகப் பெற்று சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சை செய்யும் நடைமுறை அரச வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது.

**தென்பகுதியிலிருந்து வடபகுதி மக்களுக்கு தானமாகக் கிடைத்த சிறுநீரகங்கள்!**

பிறரது உயிரைக் காக்கும் சிறுநீரக தானத்தை நாம் இறந்த பின்னர் செய்வதற்கு எமது சமூகம் முன்வரல் வேண்டும். ஒருவரது இறப்புக்குப் பின்னரும் அவர் வழங்கும் சிறுநீரக தானம் இருவருக்கு உயிர் வழங்குவது போன்றதாகும். இறந்த பின்னர் சிறுநீரக தானத்தைச் செய்வதற்கு சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும். ஒருவர் தனது இறப்புக்குப் பின்னர் சிறுநீரக தானத்தைச் செய்யுமாறு தனது குடும்ப உறுப்பினர்களுக்குக் கூறிவைக்கும் போது அந்தச் சமூகத்தில் சிறுநீரக தானம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும்.

தென்னிலங்கையைச் சேர்ந்த சகோதர இனத்தவர்கள் நன்கொடையாக வழங்கிய சிறுநீரகங்களே வடபகுதியில் சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்குச் சிறுநீரகமாற்று சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டுள்ளமையை இங்கு நாம் நன்றியுடன் குறிப்பிடல் வேண்டும். அதே வேளை இங்கிருந்தும் சிறுநீரகங்கள் தென்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இறப்புக்குப் பின்னர் சிறுநீரகங்களை வழங்கி பிறருக்கு வாழ்வுகொடுக்கும் நன்கொடையாளர்களைச் சமூகம் எதிர்பார்க்கிறது. சிறுநீரக தானம் என்பது உயிர் காக்கும் அறமாகும்.

**வைத்தியர் த. சத்தியமூர்த்தி**
**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**









# நுட்பியல் அவத்தை

## தீபாவளியைக் கொண்டாடும் கூகிள்

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இன்று உலகெங்கும் இருக்கின்ற இந்துக்கள் தீபாவளித் திருநாளைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாளிலிலும் குடும்பங்கள் தொலை தூரங்களில் இருந்தாலும் அவர்களை இணைப்பது நுட்பியல் அவத்தை என்பதை மறந்துவிடலாகாது. இந்த கொண்டாட்டத்தில் அமெரிக்காவின் நாசா நிறுவனம், மற்றும் கூகிள் நிறுவனங்களும் தமது நுட்பியல் அவத்தை திறனால் உலகெங்கும் இருக்கும் இந்துக்களை வியக்கவைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவின் தேசிய விண்வெளி நிறுவனமான நாசா வியாழன் அன்று 'இந்திய தீபாவளி இரவு 2012' செயற்கைக் கோள் படத்தை வெளியிட்டுள்ளது. இது கருப்பு மற்றும் வெள்ளை நிறத்திலான செயற்கைக்கோள் புகைப்படம்.



செயற்கைக்கோள் திட்டத்தின் Defense Meteorological Satellite Program (DMSP) தகவல்களின் அடிப்படையில் அந்தப்படம் NOAA நிறுவனத்தின் விஞ்ஞானி Chris Elvidge 2003 ஆம் ஆண்டில்; உருவாக்கப்பட்ட வர்ணப்படம் ஆகும். உலகில் காலப்போக்கில் மக்கள்தொகை வளர்ச்சி எப்படியிருக்கும் என்பதை அது வெளிப்படுத்துகிறது' என்று நாசா கூறியது.

அந்த பரவலாகப்பகிரப்படும் வர்ணவிளக்குகள் கொண்ட செம்மதிப்படத்துக்கும் தீபாவளிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை, படத்தில் உள்ள வெள்ளைப் பகுதிகள் 1992 க்கு முன்பு தெரியும் பெருநகர விளக்குகளைக் காட்டுகின்றன, அதே சமயம் நீலம், பச்சை மற்றும் சிவப்பு நிற நிழல்கள் முறையே 1992, 1998 மற்றும் 2003 இல் தெரியும் பெருநகர விளக்குகளைக் குறிக்கின்றன

'உண்மையில், தீபாவளியின் போது உற்பத்தி செய்யப்படும் எந்த கூடுதல் ஒளியும் மிகவும் நுட்பமானது, அது விண்வெளியில் இருந்து பார்க்கும் போது அது கண்ணுக்கு தெரியாததாக இருக்கும்'என்றுநாசாதெரிவித்துள்ளது.


இதே வேளை தீபாவளி கொண்டாட்டத்தில், கூகுளும் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறது. தேடுபொறி நிறுவனமான கூகிள் தனது பயனர்களுக்கு தீபாவளி ஆச்சரியத்தை அறிவித்துள்ளது, அதில் அதன் பயனர்கள் தமது பக்கத்தில்




உள்ள தேடல் உரை பெட்டியில் 'தீபாவளி' என்று தேட வேண்டும்என்றுவிரும்புகிறது. முடிவுகள்தீபாவளியின் ஒளி மற்றும் புத்துணர்ச்சியான மனநிலையை சித்தரிக்கும் அழகான அனிமேசனைக் காட்டுகின்றன.

தீபாவளி ஆச்சர்யத்தை கூகுள் தனது அதிகார பூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவத்துள்ளது. 'தீபாவளியை ஒரு ஆச்சரியத்திற்காகத் தேடுங்கள்' என்று ட்வீட் செய்தது. தீபாவளி என்ற வார்த்தைகள் எல்லா பக்கங்களிலும் ஒளிரும் விக்குகளால் சூழப்பட்டுள்ளன.

கூகுள் தேடல் பெட்டியில் தீபாவளி என்று டைப் செய்தால், முடிவுகள் வரும். அதில், தீபாவளிக்கு அருகில் உள்ள தீபங்களை அழுத்தவும். உடனே திரை முழுவதும்பலதீபங்கள்;தோன்றுவதைக்காண்பீர்கள். பின்னர் அங்கு தோன்றும் விளக்கொன்றைக் கொண்டு கொம்பியூட்டல் திரையில் தோன்றும் விளக்குகளை ஒளிர்விக்கச்செய்யலாம். இதுதிரைமுழுவதும் தீபங்கள் பரவுவது போல இருக்கும். மகிழ்ச்சியைத்




'நவம்பர் 12, 2012 அன்று, Suomi NPP செயற்கைக்கோளில் உள்ள காணக்கூடிய அகச்சிவப்பு இமேஜிங் ரேடியோமீட்டர் சூட் (VIIRS) தெற்கு ஆசியாவின் இந்த இரவு நேரக் காட்சியைப் படம்பிடித்தது' என்று தெரிவித்து நாசா 'இந்த தீபாவளி இரவில் இந்தியாவின் படத்தை' வெளியிட்டது.

'இந்தப் படம் VIIRS 'day- night band மூலம் சேகரிக்கப்பட்ட தரவை அடிப்படையாகக் கொண்டது, இது பச்சை நிறத்தில் இருந்து அருகிலுள்ள அகச்சிவப்பு வரையிலான அலைநீளங்களின் வரம்பில் ஒளியைக் கண்டறியும். நகர விளக்குகளை வேறுபடுத்துவதை எளிதாக்கும்வகையில்படம்பிரகாசமாக்கப்பட்டுள்ளது,' என்று அது கூறுகிறது.

நாசா வெளியிட்டுள்ள படங்களில் பெரும்பாலான பிரகாசமான பகுதிகள் இந்தியாவில் உள்ள நகரங்கள் மற்றும் நகரங்களை அண்டிய பகுதிகள் என்று கூறப்படுகின்றது. 'இந்தியா 1.2 பில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொண்டுள்ளது மற்றும் 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 30 நகரங்களைக் கொண்டுள்ளது' அந்த நகரங்களில் தீபாவளி ஒளி எவ்வாறு உள்ளது என்பதை இந்த செயற்கைக் கோள் படம் காட்டுகிறது. இந்தப்படத்தில் பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தானில் உள்ள நகரங்களும் படத்தின் விளிம்புகளுக்கு அருகில் தெரியும். இலங்கை அதில் தெரியவில்லை.

இந்தப்படம் வெளிவந்த அதே வேளை 'தீபாவளிக்கு ஒளிரும் பல வர்ண இந்தியாவின் செயற்கைக் கோள் படம் ஒன்று சமூக ஊடகங்கள், வலைத்தளங்களிலும் இணையத்திலும் பரவி வருகின்றன. அது, செயற்கைக் கோளின் உண்மையான படம் அல்ல என்பதும் கவனிக்கத்தக்கது.

அமெரிக்க பாதுகாப்பு வானிலை



தரும்.

தீபாவளி அன்று கூகுள் தேடல் முடிவுகள் தீபாவளி கொண்டாட்டத்தின் தேதிகளை தெரிவிப்பதோடு, விக்கிபீடியா தகவல், தீபாவளி பற்றிய செய்திகள் மற்றும் பலவற்றுடன் தொடர்புடைய பிற தகவல்களையும் வழங்குகிறது.

தீபாவளியின் வரலாறு பண்டைய இந்து இதிகாசமான ராமாயணத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. இதிகாசத்தின்படி, 14 ஆண்டுகள் வனவாசம் செய்து, இராவணனை வீழ்த்திய பிறகு, ராமர், அவரது மனைவி சீதா மற்றும் சகோதரர் லக்ஷ்மணன் ஆகியோர் அயோத்திக்குத் திரும்பிய நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் ஆயோத்தியிலும் மற்றும் இந்துக்கள் வாழும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் தீபத்திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நோர்வே கொடியில் பிரபாகரன் பொம்மை



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 159**



ஜெனிவா – 2 பேச்சுகள்

தென்னிலங்கையில் நோர்வேக்கு எதிரான பிரச்சாரங்களும், சிறுசிறு போராட்டங்களும் நடந்தாலும், மாவிலாறுக்குப் பின் முதல் தடவையாக 04 ஒக்டோபர் 2006 இல் பெருவாரியான மக்கள் பங்கு பற்றிய (அரசாங்கப் பின்னணியில் அமைந்த) ஒரு போராட்டம் நோர்வே நாட்டின் தேசியக் கொடியால் சுற்றப்பட்ட பிரபாகரனின் உருவப் பொம்மையோடு நடத்தப்பட்டது.

அப்படி ஆயினும், முன்னேற்பாடுகள் செய்யப்பட்டவாறு இரண்டாவது ஜெனிவாச் சந்திப்பை 28 - 29, ஒக்டோபர் 2006 நோர்வை அனுசரணையாளர்கள் தொடர்ந்து முன்னெடுத்தனர். அங்கு முக்கியமாக, அப்போது எழுந்துள்ள மனிதாபிமான அவலங்கள், வன்முறைகளை கட்டுப்படுத்துதல், அரசியல் தீர்வு, நாட்டின் பன்முகத் தன்மைகள் பற்றிப் பேசுவதில் அவர்கள் (நோர்வேத் தரப்பினர்) குறியாக இருந்தனர். இவ்விடயங்கள் பேசப்படும் என்று எதிர்பார்ப்புகள் குறைவாக இருந்தாலும், தொடரும் சில சந்திப்புகளுக்கு நாள்களையும், நிலத்தில் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதிமொழிகளையுமாவது பெற்றுக் கொள்ளலாம் என அவர்கள் அனுமானித்தனர். ஆனால் இரண்டுமே நிறைவேறவில்லை.

ஆயினும் இரு தரப்புகளிலும் மரியாதையான அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடியதை தவிர, தாங்கள் பக்க நிகழ்ச்சியாக தமிழ் படங்களில் வரும் நகைச்சுவை தொடர்போடு ஆகிவிட்டதான எண்ணங்கள் மேம்பட்டதால், பஸில் ராஜ பக்ஷவுடனான நேரடி சந்திப்பு ஒன்றில், டிசெம்பர் 2006 இல், அரசாங்கம் முழுமையான போரில் ஈடுபட்டு இருப்பதால் அனுசரணையாளர்களின் தேவை இருப்பதாக கருதவில்லை என்றும், யுத்த கண்காணிப்பு குழுவைக் கலைத்து விடலாம் என எண்ணுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அது மாத்திரமில்லாமல், சமாதான பணியகங்களும் தேவையற்று போனோமையால் அவற்றையும் மூடிவிடலாம் என்று செய்தியும் வைக்கப்பட்டது.

இதே போன்ற சந்திப்பு விடுதலைப் புலிகளோடும் நடத்தப்பட்டது. இரு பக்கங்களுமே நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் எனவும், யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவை கலைக்காது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை சேர்க்குமாறும், சமாதான பணியகங்களைத் தொடர்ந்தும் நடத்த வேண்டும் என்றுமே கேட்டனர். டிசம்பரில் மதியுரைஞர் பாலசிங்கம் மறைந்த பின், விடுதலைப் புலிகளுடனான தொடர்புகள் மேலும் பாதிப்படைந்தன. விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்தில் கருத்து பரிமாற்றங்களுக்கு நம்பிக்கையான இடைத் தூதுவர்கள் இல்லாதமையால் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டன.

இவற்றால் நோர்வேத் தரப்புகள் இடையே, தாங்கள் தொடர்ந்தும் சமாதான பேச்சுக்களில் ஈடுபட்டிருக்க வேண்டுமா அல்லது வெளியேறுதல் உசிதமா என்ற கேள்விகள் விவாதிக்கப்பட்டன. இரு கருத்துக்களுக்கும் நியாயமான ஆதரவுகள் இருந்தாலும், போர் தொடர்ந்தால் பாரதூரமான மனித பேரலங்களும் அழிவுகளும் ஏற்படக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளமையால், நோர்வே தொடர்ந்து சமரச முயற்சியில் இருப்பதில், அது இதுவரை இந்த சமாதான பேச்சு வார்த்தைகளில் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் மூலம் அழிவுகளை தடுக்கலாம், அன்றில், உதவிகள் ஏற்படுத்தலாம் என்று அபிப்பிராயத்தில் தொடர்ந்து செயல்பட முடிவுகள் எடுக்கப்பட்டன.

நோர்வே தங்களது தொடர்பால் சர்வதேச நாடுகளை ஸ்ரீலங்கா அரசினால் வெற்றிக்காக நடத்தப்படும் மனித உரிமை மீறல்களையும், ஏற்படுத்தும் மனிதப் பேரவலங்களையும் கண்டிக்குமாறு கேட்டதால், பல மேலைத்தேயவ்நாடுகள் அப்படியான கண்டனங்களை தெரிவித்தன. முக்கியமாக ஜேர்மனி தாங்கள் ஸ்ரீலங்காவுடன் ஏற்படுத்திய புதுத் திட்டங்களைப் பின் போட்டது. எனினும் ராஜபக்ஷக்கள் அவற்றைக் கடக்கும்(தாண்டும்) புத்திகளில்தான் ஈடுபட்டார்கள். ஏனெனில் இந்தியா மௌனம் காத்ததுதான் காரணம்.

### வேங்களும் வேதனைகளும்

2006 கடைசி பகுதியும் 2007 ஆம் ஆண்டும் வேதனை நிறைந்தவையாக நோர்வே அனுசரணையாளர்களின் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த வருடங்களில் மேலும் பலமுறை இந்தியாவுடன் அனுசரணையாளர்கள் பேச்சு நடத்தி ஸ்ரீலங்கா அரசைப் பேச்சுகளுக்குத் திரும்ப கட்டுப்படுத்துமாறும், முழுமையான யுத்தம் என்ற போக்கை கைவிடுமாறு அழுத்தம் தரவும் கூறினாலும் அவை மறுக்கப்பட்டன.

இந்திய வளையத்தின் முக்கிய கட்டமைப்பான பிராந்திய கூட்டுறவுக்கான தெற்காசிய சங்கம் (சார்க்) கூட அதன் அங்கத்தினரிடைய இருந்த உட்பூசல்கள்ால்–முக்கியமாக இந்தியா, பாகிஸ்தானின் அதிகாரப் போட்டிகளால் பலம் வாய்ந்த தீர்மானங்களை நிறைவேற்ற திராணியற்று இருந்தன.

அவற்றின் அங்கத்துவ நாடுகளில் இருந்த இன, மாகாண பிரிவினைகள் காரணமாக, அவை எல்லாமே ஸ்ரீலங்காவின் நிலைமைக்கு ஆதரவளித்து, விடுதலைப் புலிகள் பிரிவினையை கோருவதால் அதற்கு எதிரான நிலைகளையே எடுத்தன.

தனக்குக் கிட்டிய அடுத்த நாடு என்பதாலும், தனது பாதுகாப்புக் கருதியும், ஸ்ரீலங்காவின் மீது இந்தியா மிகுந்த அக்கறை கொண்டிருந்ததும், சர்வதேசம் ஸ்ரீலங்கா இந்தியாவின் மேற்பார்வை கொண்டும் கட்டுப்பாட்டுக்குள்ளும் தான் வருமென கருதி அதற்கு மதிப்பு தந்து நடந்ததும், ஸ்ரீலங்காவிற்கு வசதியானதாக அமைந்தது.

பிராந்திய பகுதியில் சார்க் நாடுகளோ, முக்கியமாக இந்தியாவும் தான் இராணுவ ரீதியாக விடுதலை புலிகள் அழிக்கப்படுவதை தடுக்கவில்லை என உணர்ந்த மஹிந்த அதனை சாதகமாகப் பாவித்து, தனது வழிமுறைகளுக்கு எதிராக மேலத்தேய நாடுகள் வைத்த குற்றச்சாட்டுகளைப் பெரும் பொருட்டாகக் கருதாது கண்துடைப்புகளிலேயே காரியமாற்றினார்.

மனித உரிமை மீறல்களுக்கும், மனிதாபிமானத்துக்கு எதிராக நடப்பவற்றுக்கும், அனுப்பப்பட்ட கண்டனங்களை சமாளிக்கும் விதத்தில் – 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற மிக மோசமான பதினாறு மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிக்க ஓர் ஆணைக் குழுவும் பின் இரண்டு மாதங்கள் கழித்து சர்வதேசத்தில் புகழ்வாய்ந்த சில்லறை independent group of eminent persons அமைத்த விசாரண குழுவை மேற்பார்வை இடுவதற்கும் வழிநடத்தவும் மஹிந்தாவால் அழைக்கப்பட்டாலும், விசாரணை குழு இப்படியானவர்களுடன் எந்தவித ஈடுபாடும் காட்டாது, எந்த விதமான சுதந்திரமான விசாரணையும் இன்றி, அரசாங்கத்துக்குச் சாதகமான அறிக்கைகளை மேற்கொண்டது.

தங்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு மாறான நடவடிக்கைகள் தொடர்பில் மேலத்தேய நாடுகள் வைத்த கண்டனங்களுக்கு மஹிந்தா தங்களது புதிய நண்பர்களான சீனா, ஈரான், ரஷ்யா, சிரியா போன்ற நாடுகளின் பாணியில் அவர்கள் ரெட்டை வேடம் போடுகிறார்கள் எனவும், முதலில் தாங்கள் எத்தனையோ நாடுகளில் – வியட்நாம், லாவோஸ், கம்போடியாவில் செய்தவற்றையும் பின் மக்களையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றுவது எனக்கூறி ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் நாடுகளில் நடத்த கொடூரங்களையும் நினைவில் கொள்ள வேண்டும் எனவும், தனது இராணுவம் கூட பயங்கரவாதிகளின் பிடியில் உள்ள மக்களை அந்தப் பயங்கரவாதத்திலிருந்து மீட்பதற்காகத் தான் போராடுகிறார்கள், அந்தப் போரில் சில இழப்புக்கள் தவிர்க்க முடியாதவை என்று எதிர் வாதங்கள் மஹிந்த தரப்பால் வைக்கப்பட்டன.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## காக்கைதீவு, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"காக்கைதீவு துறைமுகத்தில் 225 படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. தற்போது ஒரு படகுக்கு வாரத்துக்கு 30 லீற்றர் மண்ணெண்ணெயே வழங்கப்படுகிறது.

"எமக்கு ஒரு நாள் பாவனைக்கே 50 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. இந்நிலையில் இந்த 30 லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு வாரத்துக்கு எவ்விதம் போதும்?

"இந்த மண்ணெண்ணெய் பிரச்சினை காரணமாக 225 படகுகளில் 10 படகுகள் மாத்திரமே அன்றாடம் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

"தற்போது மீன்பிடிக்கான பருவகாலம் நடந்துகொண்டிருக்கிறது. மீன்பிடி பருவ காலத்தில் ஆறு மாதங்கள் மாத்திரமே நாங்கள் திருப்திகரமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

"நாங்கள் தொழில் செய்து உழைக்கின்ற இந்த காலப்பகுதியில் எமக்கு மண்ணெண்ணெயை சீராக வழங்காவிட்டால், நாங்கள் எவ்வாறு மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது?

"அரசியல்வாதிகள் தங்களது இருப்பினை தக்கவைத்துக்கொள்ளவும், அரசியல் இலாபங்களுக்காகவும் அடிபடுகின்றார்களே தவிர, எங்களது பிரச்சினைகளுக்குச் செவிசாய்ப்பவர்களாகத் தெரியவில்லை.

"இந்நிலை மேலும் தொடர்வதால், எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, நாங்கள் அன்றாட உணவு மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் எமது பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு எமக்கான சீரான மண்ணெண்ணெய் விநியோகத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" – என போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

## விக்டோரியா நீர்த் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படங்களை எடுத்துக் கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ட்ரோன் மூலம் சுற்றுவட்டாரப் பகுதிகளை படங்கள் அல்லது வீடியோக்கள் எடுக்க வேண்டாம் என பாதுகாப்பு அதிகாரிகள் அறிவுறுத்திய போதிலும், அறிவுறுத்தல்களை புறக்கணித்து வீடியோக்கள் மற்றும் படங்களை எடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் 7 பேரும் கைது செய்யப்பட்டு ட்ரோன் கமெராவுடன் தெல்தெனிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 31 மற்றும் 32 வயதுடைய வெலிகம மற்றும் தெஹிவளை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் கண்டிக்கு சுற்றுலா வந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவின் தனியார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், இவ்வளவு பெருந்தொகை போதை மாத்திரை மருத்துவ தேவைக்காக இருக்காது என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவதாக பலரும் சுட்டி காட்டி வரும் நிலையில் பொறுப்பு வாய்ந்த மருத்துவர் ஒருவர் தனது மருத்துவ நிலையத்தின் ஊடாக 400 போதை மாத்திரைகளை மாதாந்தம் பெற்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோர் கவனம் செலுத்தி மாவட்டத்தின் இளம் சமுதாயத்தை போதைப் பாவனையில் இருந்து காப்பாற்ற முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

## 43 யாழ்ப்பாணவாசிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உனவட்டுன பிரதேசத்தில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்த நிலையிலேயே இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.




# பொருளாதார நெருக்கடி அவலநிலை நீங்கி தடைதாண்டி ஒளி நிறைந்த வளர்ச்சிப் பாதை நோக்கி பயணிக்கிறோம்!

## தீபாவளி வாழ்த்தில் மஹிந்தர் பிரார்த்தனை



நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி என்ற அவலநிலை நீங்கி, ஒளி நிறைந்த வளர்ச்சிப் பாதை நோக்கி, பல தடைகளைத் தாண்டி நாம் பயணித்துக்கொண்டிருக்கிறோம். அனைத்துத் துறைகளிலும் நம் தேசம் முன்னேற்றம் காண வேண்டும் என்பதே எம் அனைவரினதும் பெருவிருப்பு.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தீபாவளி வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இன்று உலகையே அச்சுறுத்தி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பணியோடு, பல முன்னேற்றகரமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடுகளையும் நாம் முன்னெடுத்து வருகிறோம். அனைவரதும் அபிலாஷைகள் நிறைவேறி, இலங்கைத் திருநாடு சுபீட்சம் மிக்கதொரு தேசமாக மலரும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும்.

இருட்டு வழிக்கு ஒளி இருந்தால் அதுவே நாம் செல்லும் வழிக்குத் துணையாக அமையும். மனித வாழ்க்கைப் பாதைக்கு இறை ஆசி என்னும் அருட்தீபம் துணை நின்றால் வாழ்வு சுபீட்சமாகும். அத்தகைய அருட் தீபமாகிய ஆன்மீக ஞான ஒளியை இறைவழிபாடு மூலம் பெறும் சிறப்பு வாய்ந்த நன்னாளே தீபாவளித் திருநாள்.

இந்துக்கள் அனைவராலும் பக்தியோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் இந்தத் தீபாவளித் திருநாளில் உங்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தேசிய ஒற்றுமையைப் போற்ற இது ஒரு சிறந்த நாளாகும். எல்லா மதங்களிலும் விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்படுவதென்பது, எம்முள் இருக்கும் அறியாமை என்னும் இருள் அகன்று அகவொளி பிரகாசிக்க வேண்டும் என்பதற்கான குறியீடே. இந்நன்னாளில் ஏற்றப்படும் தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியில் சிறந்த புரிந்துணர்வுக்கான சமிக்ஞையாகவே எண்ணப்பட வேண்டும்.

மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்துவைத்திருந்த எல்லா வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத்தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம். இந்த ஒளியை நாம் அணைய விடாமல் பாதுகாத்து மறுபடியும் இருளுக்குள் மூழ்காமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என இலங்கை மாதாவின் பிள்ளைகளை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைவாழ் இந்துமக்கள் அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துகள். – என்றுள்ளது.

# தமிழர்களின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்க இந்துக் குருமார் அமைப்பு பிரார்த்தனை

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு

தமிழர்களின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்க இந்துக் குருமார் அமைப்பு பிரார்த்திப்பதாக அதன் தலைவர் சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் மற்றும் செயலாளர் சிவஸ்ரீ. ச. சாந்தரூபக் குருக்கள் ஆகியோர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

தமிழ் மக்கள் வாழ்வில் ஒன்றிணைந்த திருநாள்களில் தீபாவளி பண்டிகை பிரதானமான இடத்தை வகிக்கிறது. எமது மக்கள் வாழ்வில் பல்வேறு விதமான கஷ்டங்கள், துயரங்களை எதிர்கொண்டு வரும் காலப்பகுதியில், ஒரு தீப ஒளியானது எவ்வாறு இருளை அகற்றுகிறதோ அதுபோலவே எமது மக்கள் வாழ்வில் சகல துயரமும் நீங்கி இன்பமான வாழ்வும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சமான வாழ்நிலை அமைந்திட வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து கொள்கின்றோம்.

இச்சமயத்தில் நாம் இயன்றவரை அதிகரித்த செலவினை தவிர்த்து, தேவையுடைய மக்களுக்கு இயன்றவரை உதவியுடன் ஆதரவு வழங்குவது நமது கடமையாகவும் தேவையாகவும் உள்ளது. ஆகவே இயன்றவர்கள் இயன்றவரை உதவி, அனைவருக்காகவும் பிரார்த்திப்போம். – என்று உள்ளது.



## நியூயோர்க்கில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர்கள் இணைந்து நடத்திய அழகிகளைத் தெரிவு செய்யும் போட்டியின் போது ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய பலரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com

# நாட்டில் உணவுப் பணவீக்கம் கட்டுமட்டில்லாமல் எகிறியுள்ளது!

## புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

சப்ரெம்பர் மாதத்துக்கான பணவீக்கம் 73.2 வீதம் ஆக அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒகஸ்ட மாதத்தில் பணவீக்கம் 70.2 வீதம் ஆக இருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒகஸ்ட மாதத்தில் 84.6 வீதம் ஆக இருந்த உணவுப் பணவீக்கம் செப்ரெம்பர் மாதத்தில் 85.8 வீதம் ஆகப் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதன்படி மாத வருமானம் பெறுபவர் ஒரு லட்சம் ரூபா அல்லது அதற்கு மேல் வருமான வரி செலுத்த வேண்டியிருப்பதோடு உயர்ந்த தனிநபர் வருமான வரி விகிதம் 36 வீதம் உயர்துள்ளது.

ROHINI
Boarding and Lodging
Airport அருகில் ரம்மியமான தங்குமிட வசதி
2.5 Km மட்டுமே (10 நிமிடம்) Arrival இருந்து
Room வாடகை 4000 முதல் ஆரம்பம் AC மற்றும் Non AC உண்டு.
Tea, சாப்பாடு, Shortcats வசதிகள் உண்டு.
வாகன வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும்.
சுத்தமானதும் பாதுகாப்பானதுமான தங்குமிடம்.
எம்மவர்களால் எம்மவர்களுக்காக...
Wettawa Road, Ammandoluwa, Seeduwa, Katunayake, Sri Lanka
rohiniboardingandlodging@gmail.com
076 695 0622

NFlash Super Detergent
வேலை வாய்ப்புக்கள்
வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்
கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்.
சாரதி - Light Vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் (முன்பள்ளி) - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர்- வாகன உதவியாளர் (பெண்),
ஆசிரியர்- தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை
வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள்தேவை
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் ரோல், வடை போன்ற நொறுக்குத் தீனிகள் தயாரிப்பவர்கள் ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி - விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்
EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதி வாய்ந்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.
வட்ஸ் அப் - 0779635551
முகவரி - 186/11 NFlash Super detergent
நெசவுசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ். பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

மலையக மக்களின் அன்பு கலந்த
குறிஞ்சி கோப்பி

நீங்களும் கோப்பியினை பெற்றுக்கொள்ள, மேலதிக விபரங்களுக்கும் அழையுங்கள்
+94 76 44 38 620

விமான நிலைய போக்குவரத்து மற்றும் சுற்றுலா ஏற்பாடுகள்

நாடுமுழுவதும்
நட்சத்திர விடுதிகளில் தங்குமிட வசதிகள்
சுற்றுலா ஒழுங்கமைப்பு வசதிகள்
போக்குவரத்து வசதிகள்
Asiazone Vacation (Pvt) Ltd
#45A, Pennyquick lane, Colombo 06.
#551A, Kasthuriyar Road, Jaffna.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 068 4905

# அரசாங்கத்தின் புதிய விதிகளால் கைதிகளின் உரிமைகள் பறிப்பு!

## அம்பிகா சற்குணநாதன் கண்டனம்



சிறைச்சாலை கட்டளைச் சட்டம் கைதிகளின் உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளது என மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் புதிய விதிகளை வகுத்துள்ளது என்றும் அவர் தனது ருவிட்டர் பதிவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை வாரத்திற்கு 6 நாள்கள் பார்வையிடலாம் என்ற அனுமதி, வாரத்துக்கு ஒருமுறை என குறைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சிறைக்குள் இருக்கவேண்டிய நேரத்தை நாளொன்றுக்கு 23 மணித்தியாலங்களாக அதிகரிப்பது உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சமைத்த மற்றும் சமைக்கப்படாத உணவுகளைத் தடைசெய்யப்பட்ட பொருள்கள் என பட்டியலிட்டால் உணவு வழங்க முடியாத நிலை கைதிகளின் உறவினர்களுக்கு ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிறையில் கொடுக்கப்படும் உணவுகள் தரமில்லாத காரணத்தாலேயே உறவினர்கள் சமைத்த உணவை வழங்குகின்றனர் என்றும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

12 மாதங்களுக்கும் மேலாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நபர்கள் சிறைக்கு வெளியே வேலை செல்ல அனுமதிக்கும் விதி குறித்தும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.






# நாடாளுமன்ற அமர்வுகளை மாணவர் பார்வையிட அனுமதி!



நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கும் நாடாளுமன்ற விவாதங்களைப் பார்வையிடுவதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பில் நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து முன்வைத்த யோசனைக்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அனுமதி அளித்துள்ளது.

இதற்கமைய நாடாளுமன்றத்தில் உள்ள பொதுமக்கள் கலரியிலிருந்து விவாதங்களைப் பார்வையிட பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

இதேவேளை நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் கடந்த செப்ரெம்பர் 20ஆம் திகதி முதல் தளர்த்தப்பட்டிருந்த போதும் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.10.2022இல் வெளியிடப்பெற்றது.